1982 மார்ச் 9]

காலங்களில் இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்து பெரிதும் பயன் படும் என்பது உண்மைதான் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த உணர்வின் அடிப்படையிலேயே, அது சீக்கிரமாக வேண்டும் என்ற வகையில்தான் மத்திய அரசாங்கத்தை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இதைத் தவிர, மாநில அரசு வேறு என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தைத் திருச்சியில் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 436—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தை திருச்சியில் அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) தற்போது சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 800 ஆக இருப்பதால் அரசு இக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க திட்டமிட்டுள்ளது. இதுபற்றிய செயற்குறிப்பு சோழன் சாலைப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடமிருந்து வந்தவுடன் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. மே. அ. இராசகுமார்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கத் திட்டம் உள்ளதாக கூறினார்கள். அப்படி பிரிக்கப்படும்போது, திருச்சியிலே ஏற்படவிருக்கும் போக்குவரத்துப் பிரிவிற்கு, ராஜராஜசோழன் போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் இடுவதை இப்பொழுதே இந்த நேரத்திலேயே சொல்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. என்ன பெயர் வைத்தாலும் எது பொருத்தமாக இருக்கும் என்பதையெல்லாம் ஆராய்ந்து தான் பின்னர் முறையாக பெயர் வைக்கப்படும். இதை பிறகு முடிவெடுக்கலாம்.

திரு. மே. அ. இராசகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சோழன் நிர்வாகத்தை இரண்டாகப் பிரிக்க திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அதுவரையில் தற்காலிகமாக சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை திருச்சியிலே அமைக்க அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக மாற்றுவது என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. நடைமுறையில் ஒவ்வாது. ஆகவே நிரந்தரமாக அமைப்பதற்கு வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

DIFFERENT TYPES OF BUSES FOR VARIED REQUIREMENTS

*Q. No. 437—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether this Government has any proposal to operate different types of buses to suit the varied requirements of the passangers and

(b) if so, the details thereof.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) தற்போது நான்கு விதமான பயணிப் பேருந்துகள் தமிழ்நாட்டில் பயணிகளின் தேவைக்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. அவையாவன :—

(i) சாதாரணப் பயணிப் பேருந்துகள் (நகரப் பேருந்து, வெளியூர்ப் பேருந்து, விரைவுப் பேருந்து).

(ii) மினி பஸ்கள் என்கிற சிறு உந்துகள் ;

(iii) ஜீப் உந்துகள் மற்றும்

(iv) பயணிகள் மற்றும் சரக்கு வண்டிகள்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.